43 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச் சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
'சங்கு' சுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 8-5-33

காந்தியின் தபோ சக்தி



காந்தியடிகள் இன்றைக்கு எரவாடாவில் உண்ணாத் தவம் தொடங்குகின்றார். அந்தத் தவத்தின் பயனாக அண்ணலின் ஆன்ம சக்தி ஆயிரம் பங்காக வளர்ச்சியுறும். ஒரு காந்தி ஆயிரம் காந்தியாக ஒளிர்வார்! ஹிந்து மதம் புத்துயிர் பெறும், என்பது திண்ணம்! இந்திய நாடு கடைத்தேறுமென்பதும் திண்ணம்!

நீடூழி வாழ்க நிலத்தில் காந்தி!

தவ ஆரம்பம்

உலகமுய்யத் தோன்றிய அருட்பெருஞ் ஜோதி, இந்தியருக்கு வாழும் வகை யறிவிக்க வந்த பெருவள்ளல், சாந்தம் பொழியும் காந்தி யடிகள் இன்று தம் உண்ணு விரதம்—கடுந் தவத்தைத் துவங்குகின்ருர். நாடெங்கும் இன்று ஒரு புறம் பெருங் கவலையும், மறு புறம் வியப்பும் திகைப்பும் ஒருங்கே மக்கள் மனத்தைக் கலக்கிக்கொண்டிருக்கின்றன. கிழக்கும் மேற்கும், உலகின் நாலு திசையும் இன்று எரவாடா சிறை நோக்கி, இருகரங் கூப்பித் தொழுது நிற்கும் உள்ளங்கள் எண்ணிலவாகும்.

பாரத மக்கள் பண்டைக் கதைகளான பாரத இராமாயணங்களில், தவமும், தியாகமும் முனி புங்கவர்கள் புரிந்ததாகப் படித்திருக்கின்ருேம். ஆனல், இன்று நம் நடுவே, பிரத்தியட்சத்திலே உண்மைத் தவசி யொருவர், தியாக புருஷ ரொருவர் தோன்றி, நினைக்க உளங் கலக்கும் மகா யக்ஞமொன்றைத் துவங்கி யிருப்பதை நாம் கண்டும் கேட்டும் சும்மா விருப்போமாகில் கண்ணிருந்தும் குருடாய், செவி யிருந்தும் செவிடராய் வாழ்க்கையை வீணுக்கி பின்னுல் வருந்தி மறுகவேண்டி வரும்.

ததீசி முனிவர் உலக நலனை உன்னி தம் உயிரையும் துறந்து முதுகெலும்பை நல்கினர். ராமன் தன் தந்தையின் சத்தியத்தைக் காக்க, நாடும் போகமும் துறந்து கானகம் நண்ணினன். சாக்ரடீஸ் தமது தத்துவ தர்சனத்தி னிமித்தம் உயிர் ஈந்தார். இன்று எம்மான் காந்தி, ஹிந்து தர்மத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கும் தீண்டாமையைத் தொலைக்கவும் உலகு நலன்பெறச் செய்யவும், பூனு ஒப்பந்த மென்னும் புனித முறியில் ஜாதி ஹிந்துக்கள் செய்து தந்திருக்கும் சத்தியத்தைக் காப்பாற்றவும், ஈசன் திருமுன்னர் யாவரும் ஒன்றே என்னும் தம் உன்னத தத்துவத்தை நிலை நாட்டவும், தம் ஆவியையே பணயம் வைத்துத் தியாக அக்னியில் இறங்கி விட்டார்.

இன்று பாரத நாடு, "என்ன நிகழ்ந்திடுமோ! எது விளைந்திடுமோ!" என்று எண்ணம் பதறி நிற்கின்றது. மெய்யன்பர்கள், அஞ்சலி செய்து இறைவனை நோக்கித் தநி புரிந்து, "எங்கள் காந்தியை, எங்களிடையே இன்னும் பன்னுள் இருத்தி, நாட்டின் துயர் களைய அருள் புரி" என்று இறைஞ்சுகிருர்கள், உள்ளங் கனிந்த பிரார்த்தனை முழுப் பயனும் தருவது உறுதி.

காந்திஜிக்கு உளப் பசி, ஆன்ம தாகம் ஏற்பட்டிருக்குங்கால், அவரை உடற் பசிக்கு ஆட்படாதிர்கள் என்று யார் தடுத்தாலும், அவர் செவி கொடுப்பாரோ? ஆன்ம உணவை அவர் வேண்டி நிற்கின்ருர். தீண்டாமை யென்னும் அழுக்கு மலை கரைந்து கரைந்து மாய்ந்து வருகின்றது என்ற ஒவ்வொரு செய்தியுமே அவருக்கு ஆன்ம அமிழ்தமாகும். காந்திஜீயினிடமும், நாட்டினிடமும் உண்மை யன்பு கொண்ட யாவரும் அவ்வமிழ்தினை அவருக்கு அளிப்பார்களாக. ஒழிக தீண்டாமை! வாழ்க மகாத்மா! வந்தே மாதரம்!

தோட்டம் நிலக்குமுன்

"காந்திஜீ உபவாசம் தலைக்குமேல் வந்து விட்டது. ஜனங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். உதகமண்டலம் சுகவாசத்துக்கு வந்திருக்கும் சட்ட சபை அங்கத்தினர் இப்பொழுதுதான், காங்கிரஸை வரும் தேர்தலில் தோற்கடிக்க, மந்திரிக் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒற்றுமைப்பட வேண்டுமென்று பேரம் பேசிக் கொண்டிருக்கிருர்கள்" என்று ஓர் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. இந்த ராஜீய வாதிகளை என்னவென்று சொல்லுவது? தேசமே கொந்தளித்துக் கொண்டிருக்கிறது? அடுத்த நிமிஷம் என்ன நடக்குமோ வென்று யாரும் சொல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சட்ட சபை பற்றி காங்கிரஸ் யோசனையே செலுத்தவில்லை. புதிய சீர்திருத்தம் என்பது யானை கர்ப்பமா யிருந்து கொண்டிருக்கிறது. அது குட்டி போடத்தான் போகிறதோ, இல்லவே யில்லையோ. இந் நிலையில் இவர்கள் சட்ட சபை நாற்காலிகளையும், மந்திரி சபை அதிகாரத்தையும் பற்றிப் பாகம் போட்டுக் கொண்டிருக்கிருர்கள். தோட்டம் நிலக்கு முன் தென்னம் பிள்ளையை எண்ணுவோர் மதியை என்னவென்று சொல்லுவது?

ராஜாஜீ வேண்டுகோள்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் பின் வரும் வேண்டுகோளை விடுத்திருக்கிறார்:—

"காந்திஜீயைத் தீர்மானத்திலிருந்து அசைக்க முடியவில்லை. ஆகையால், தமிழ் நாட்டிலுள்ள எல்லா வகுப்புகளையும் சமயங்களையும் சேர்ந்த ஆண், பெண், குழந்தைகள் உள்பட சகலமான வர்களுக்கும் நான் இவ் வேண்டுகோளைச் செய்து கொள்ளுகிறேன். காந்திஜீயையும், 21-நாள் உபவாச மகா தியாகத்துக்கு ஆட்பட்டிருக்கும் அவரது அரிய உயிரையும் பற்றி அவர்கள் யாவரும் சிந்திப்பார்களாக. ஈசுவர பக்தியும், காந்திஜீயின் உயிர் மதிப்புயர்ந்தது என்ற கருத்தும் உடைய யாவருக்கும் நான் செய்து கொள்ளும் வேண்டுகோள் இதுதான். அவர்கள் யாவரும் தங்கள் தங்கள் இதர வேலையை யெல்லாம் தள்ளி வைக்க வேண்டும்; எல்லா வாதப் பிரதிவாதங்களையும் ஒதுக்கி வைக்க வேண்டும். 8உ-யை, தீமைகளை யெல்லாம் உதறித் தள்ளுவதற்கான ஆத்மார்த்த முயற்சிகளிலேயே இடைவிடாது கழித்தல் வேண்டும்; காந்திஜீயின் உயிரை நமக்குக் காப்பாற்றித் தருமாறு, சர்வ சக்தி வாய்ந்த இறைவன்மீது உருக்கமான பிரார்த்தனைகளைப் பொழிந்து கொண்டிருத்தல் வேண்டும்."

பிரார்த்தனை நாள்

மகாத்மாஜீயின் உண்ணு விரதம் சம்பந்தமாக, அகில இந்தியத் தீண்டாதோர் சேவா சங்கத் தலைவர் ஸ்ரீமான் ஜி.டி. பிர்லா பின்வரும் வேண்டுகோளை வெளியிட்டிருக்கிறார்:—

"காந்திஜீயின் இரண்டாவது உண்ணுவிரதம் மேமீ 8உ தொடங்கி,21 நாட்கள் நடைபெறும். காந்திஜீ நீடூழி வாழவேண்டு மென்றும், அவரது கடும் விரதம் வெற்றிகரமாக முடியவேண்டு மென்றும், அன்று யாவரும் பகவானைப் பிரார்த்திக்க வேண்டும். ஹரிஜனங்களுடைய க்ஷேமத்தையும், பிரதம ஹரிஜனரான காந்திஜீயின் க்ஷேமத்தையும் தங்கள் உளம் பதித்துக்கொண்டிருக்கும் யாவரும் அன்றைய தினம் 24 மணி நேரமும் உபவாசம் அனுஷ்டிக்க வேண்டும். கல்வி, பொருளாதாரம், சமூகம் முதலிய துறைகளில் ஹரிஜனங்களை உயர்த்தும் வேலைகளில் மும்முரமாக ஈடுபடவும், அதே தினத்தில் மனத்தால் சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும். அந்நாளை மத உணர்ச்சியோடு ஓர் புனித தினமாக யாவரும் கொண்டாடுவார்களாக."

காந்திஜியை விடுதலை செய்ய—

"காந்திஜியை உடனே விடுதலை செய்ய வேண்டு மென்றும், அவரைத் தொடர்ந்து சிறையில் வைத்திருப்பதோ அல்லது சிறையில் சாகும்படி விடுவதோ கிறிஸ்தவ ஜாதிக்கும், மதத்திற்கும் அழியாத மானக்கேடாக முடியும்" என்றும் லண்டனிலிருந்து லான்ஸ்பரி வைஸ்ராய்க்கு தந்தி யனுப்பி யிருக்கிறார்.

விடுவிக்கப் பட்டால் ஆமதாபாத் ஹரிஜனங்களிடையே ஒரு குடிசையில் வசிக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டு ஹரிஜனத் தலைவர் கிகாபாய் காந்திஜிக்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறாராம்.

"நான் ஹரிஜனங்களை ஒதுக்கி வைத்த ஜாதியில் பிறந்து விட்டேன். அன்னபானுதிகளை உட்கொண்டு நான் சாதிக்கக் கூடியதை விட இந்த உபவாசத்தால் அதிகம் சாதிக்க முடியும்" என்று மகாத்மாஜி தமது ஆசிரமத்திலுள்ள ஒரு தாழ்ந்த வகுப்பு நண்பருக்கு எழுதி யிருக்கிறாராம்.

தந்தி வெள்ளம்

வங்காளத்திலிருந்து மட்டும் மகாத்மாஜியின் தேக நிலையைப்பற்றி பதில் தெரிவிக்கும்படி எரவாடா ஜெயிலுக்கு சுமார் 500 தந்திகள் வரையில் வந்திருக்கின்றனவாம்.

சென்னை நிகழ்ச்சித் திட்டம்

மகாத்மாஜீ உபவாச காலத்தில் பின்வருமாறு வேலை செய்ய சென்னையிலுள்ள தீண்டாதார் சேவா சங்கத்தாரும் மகாஜன சபையாரும் ஒன்று சேர்ந்து திட்டம் போட்டிருக்கிறார்கள்:

1. மகாத்மா நீடூழி வாழவும் வெற்றி யடையவும் ஈசுவரப் பிரார்த்தனை.
2. சேரிகளில் பஜனை, சுத்தம் செய்தல் முதலிய பிரசாரம்.
3. தினந்தோறும் பல பகுதிகளில் கூட்டமும் பஜனையும்.
4. சென்னையில் சில ஹரிஜன வாசஸ்தலங்களை, பிறருக்கு உதாரணமாக விளங்கத் தக்கவாறு சுத்தமாக்கி அபிவிருத்தி செய்வதற்காக ரூ. 10,000 வசூலித்தல்.

8உ திங்கட்கிழமை

1. பிரார்த்தனை, பஜனை, கோயில்களில் விசேஷ அர்ச்சனை.
2. ஹைகோர்ட் கடற்கரையில் மாலை மணி 6-30க்கு கூட்டமும், கூட்டப் பிரார்த்தனையும்,

தேசத்தின் தவிப்பு—தலைவர்களின் வேண்டுகோள்

[மகாத்மாஜியின் உபவாசத்தைப் பற்றித் தலைவர் அபிப்பிராயங்களில் சில பின்வருமாறு.]

ஜே. ஸி. குப்தா :—இந்த யுகத்திலேயே மனிதர் யாவரினும் தலை சிறந்த மகான் தமது மூன்று வார உபவாசத்தைத் துவங்குகிறார். நாம் இந் நெருக்கடியான சமயத்தில் நமது பொறுப்பை உணராது சோம்பி உட்கார்ந்திருப்போமானால், நம் வாழ்க்கையின் வருங்காலம் முழுவதும் உளம் வருந்தி, சங்கடப்பட வேண்டி வருமென்பதை எச்சரிக்கிறேன்.

சந்தோஷ்குமார் பாசு (கல்கத்தா மேயர்) :—தீண்டாமையை அடியோடு அழிக்கும் வேலையில் நாம் ஊக்கமாக ஈடுபட வேண்டும். உபவாசத்தை விடும்படி மகாத்மாவை வற்புறுத்த, நமக்கு இந்த ஒரே வழிதான் உண்டு.

ஜமால் முகம்மது சாஹிப் (மகாத்மாவுக்கு அடித்த தந்தியில்) :—உங்களுக்கு நான் புத்தி சொல்லக் கூடியவனல்ல. என்றாலும், உங்கள் உபவாசத்தால் சகல சமூகங்களும் மிகப் பெருங் கவலை கொண்டிருக்கின்றன என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த தேசம் மாத்திரம் அல்ல, உலகத்திலுள் எல்லா மக்களின் நன்மையையும் உத்தேசித்து, உங்கள் தீர்மானத்தைப் புனராலோசனை செய்யும்படி மன்றாடி வேண்டிக் கொள்ளுகிறேன்.

என். சுப்பிரமணிய அய்யர் (திருவாங்கூர் வைதிக ஹிந்துக்கள் மகாநாட்டுத் தலைவர்) :—காந்திஜியின் உடம்பு அவருடைய சொந்த உடைமையல்ல. ஒரே ஒரு ஹிந்து ஆட்சேபம் செய்தாலும், தனது உடம்பைக் கஷ்டத்திற்கு அவர் உட்படுத்தலாகாது. அவரது உபவாசம் சனாதனிகளுக்கும் கவலையை உண்டாக்கி யிருக்கிறது. சொல்லுவது போல செய்கையில் ஈடுபடும் அவரைப் போன்ற ஒரு தலைவர் இச்சமயத்தில் தான் இந்தியாவுக்கு மிகத் தேவை.

டாக்டர் அன்ஸாரி தெரிவிப்பதாவது :—ஒரு பழய நண்பன் ; உங்களோடு சேர்ந்து உழைத்தவன், மேலும் ஒரு வைத்தியன் என்ற முறையில் நான் எழுதுகிறேன். தங்கள் பிரதிக்ஞையைக் கேட்டு கலகலத்துப் போனேன். உங்கள் உயிருக்கு ஆபத்து வருமென்று வைத்தியர் சொல்லும் போது உபவாசத்தை நிறுத்தி விடுவதாக உறுதி கூற வேண்டும்.

டாக்டர் சையது முகம்மது (மகாத்மாவுக்கு அடித்த தந்தியில்) :—"பல நூற்றாண்டுகளாக ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சேர்ந்து வாழ்கிறார்கள். ராமானந்தர், கபீர், துளசிதாஸ், சைதன்யர், இன்னும் பல மகான்கள் எவ்வளவோ உபதேசங்கள் செய்திருக்கிறார்கள். அவற்றாலெல்லாம் உண்டாகாத நற்பலன் உங்கள் முயற்சிகளால் விளைந்திருக்கிறது. போன வருடம் செப்டம்பர் மாதத்தில் தீண்டாமை என்ற அரக்கனை அநேகமாகக் கொன்று விட்டீர்கள். அவ்வாறிருக்க, ஏன் இந்த அவசரம்? மேலே கிடைக்க வேண்டிய பரிபூரண வெற்றிக்கு, நீங்கள் ஜீவித்திருப்பது மிக அவசியமாகும்."

மீராபாய்

தாங்கள் உண்ணாவிரதமெடுக்கக் கூடாது. அப்படி எடுக்கும் பக்ஷத்தில், விரதத்தினால் ஏற்படும் தீங்கினின்று தப்புவிக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

காக்கா கலேல்கர்

"காந்திஜியை 21 நாள் உபவாஸமிருப்பதை நிறுத்திவிடும்படி கேட்பதை விட, எல்லோரும் சேர்ந்து 21 நாளையும் வெகு சீக்கிரத்தில் சுற்றி விடும்படி சூரியனைப் பிரார்த்திப்பது உசிதம்" என்று காந்திஜியின் சகாவான காகா கலேல்கர் கூறினார்.

தியாகம் எப்பொழுது பூர்த்தி?

தீண்டாதோர் தலைவரான ஸ்ரீமான் ராஜ் போஜ் என்பவருக்கு மகாத்மா காந்தி ஒரு கடிதத்தில் எழுதி யிருப்பதாவது :—

"சென்ற செப்டம்பர் மாதத்தில் துவங்கிய தியாகம் இன்னும் பூர்த்தி யாகவில்லை. அது இன்னும் தொடர்ச்சியாகவே இருந்து கொண்டிருக்கின்றது. தீண்டாமை அழிய வேண்டும் ; பிறப்பினால் எவரும் தீண்டக் கூடாதவரென்றோ, தீண்டக் கூடியவரென்றோ, உயர்ந்தவரென்றோ, தாழ்ந்தவரென்றோ கருதி வரும் வழக்கம் தொலைய வேண்டும். அப்பொழுது தான் இந்தத் தியாகம் பூர்த்தியாகும். தீண்டாமை என்ற நஞ்சு இந்தியக் கிருஸ்தவர்களிடையே கூடப் பரவி விட்டது. பகவானுடைய அனுக்கிரகத்தினால், கடின உழைப்பு, மகாதியாகம் ஆகியவற்றின் மூலம் அந்த நஞ்சை நான் களைந்தே தீருவேன்."

இறைவன் தூண்டுதலே

[மகாத்மா காந்தி]

[ஜெனரல் ஸ்மட்ஸ், அன்ஸாரி, ராஜாஜி, தேவதாஸ் ஆகியவர் தமது உபவாசத்தை நிறுத்தும்படி செய்து கொண்ட வேண்டுகோள்களுக்கு மகாத்மா காந்தி கொடுத்திருக்கும் பதிலாவது:]

எனது இந்த உபவாசம் இறைவனால் தூண்டப்பட்டது என்பதில் இவர்களுக்கு நம்பிக்கை யில்லை போலும்! எனது வார்த்தையை நம்பவில்லை என்று நான் கூற மாட்டேன். ஆனால், எனக்கு ஏதோ மனமயக்கம் ஏற்பட்டிருப்பதாகவும், கொதிப்படைந்த மனக் கற்பனைக்கு நான் இரையாகி விட்டதாகவும் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் சிறைச் சுவர்களுக்குள் அடைந்து மூச்சு திணறிக் கொண்டிருப்பதால், என் மூளை அதிகக் கொதிப்படைந்து விட்டதாக அவர்கள் கருதுகிறார்கள். இது உண்மையாயு மிருக்கலாம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவ்வாறில்லை என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும் வரையில், அவர்களுடைய அபிப்பிராய மெல்லாம் எவ்வாறு என் மனத்தை மாற்றும்?

நான் ஒரு வாடிக்கைக் கைதி. சிறைச் சுவர்கள் ஒரு போதும் என் தீர்மானங்களுக்கு உருக் கொடுத்ததில்லை; குருட்டு யோசனைகள் செய்து கொண்டிருக்கும்படி என்னை அவை தூண்டியது மில்லை. கடவுளே என் உபவாசத்தைத் தூண்டி யிருக்கிறார் என்பதை நிரூபிக்க, என்னிடம் ஒரு வழியு மில்லை. பலனைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றுதான் கூற வேண்டியவனா யிருக்கிறேன். இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவன்கள் இறைவனை ருஜுப்பித்துக் காட்ட முடியுமா? அவ்வாறு காட்ட முடியுமானால், அவர் கடவுளாகவே யிருக்க முடியாது. ஆனால் விருப்போடு தமக்கு தொழும்பு பூணும் அடிமைக்கு, மிகக் கடும் சோதனைக்கும் ஈடு கொடுத்து மீள வேண்டும் சக்தியை அவர் அருள்கிறார். கடமையாய் வேலை வாங்கும் இவ்வெஜமானனுக்கு நான் அரை நூற்றாண்டுக்கு மேலாக, விரும்பித் தொழும்பு பூண்ட அடிமையா யிருந்து வந்திருக்கிறேன். ஆண்டுகள் செல்லச் செல்ல, அவரது குரல் என் காதுகளில் அதிகத் தெளிவாய்க் கேட்டு வருகிறது. இருளால் சூழ்ந்து நான் அவதியுறும் எந்த நேரத்திலும் என்னைப் படைத்த பகவான் என்னைக் கை விட்டதில்லை. ஒரு தடவை யல்ல, பன்முறை அவர் என்னைக் காப்பாற்றி யிருக்கின்றார். எனக்கு ஒரு துளி சுதந்திரமும் அவர் நல்கவில்லை. அவரை நான் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகச் சரண் அடைகின்றேனோ அவ்வளவுக்கவ்வளவு எனது மகிழ்ச்சியும் மிகுதியா யிருக்கின்றது. ஆதலால், நான் இறங்கப்போகும் காரியம் நியாயமானதே என்பதை இவ்வன்பு மிக்க நண்பர்கள் உணர்ந்து கொள்ளப் போவது நிச்சயம். ஈசுவரனது வழிகள் ஆராய்ந்தறிய முடியாதவை; அதிசயமானவை. நான் ஜீவித்திருப்பதை விட எனது உபவாஸத்தின் பயனாக நான் மரண மடைந்தால், அதுவே நற் பயன்களை விளைவிக்கு மென்பது ஆண்டவன் கருத்தோ என்னவோ? இல்லை யென்று யார் கண்டார்?

மனிதர் இயற்றும் நல்ல காரியங்கள் அவர்களோடு புதைந்து விடுகின்றன என்பது உண்மையல்ல. மனிதர்கள் புரியும் தீய காரியங்களைத் தான் அவர்கள் சவத்தோடு நாம் எரித்து விடுகின்றோம். அவர்கள் புரியும் நன்மைகளை நாம் பொக்கிஷம் போல் போற்றிக் காக்கிறோம். காலம் செல்லச் செல்ல அவை இன்னும் பெரிதாய்க் காண்கின்றன. ஒரே ஒரு மனிதன் எவ்வளவுதான் நல்லவனும் திறமை மிக்கவனாயு மிருக்கட்டுமே—அவனது சேவைகளுக்கு ஏன் மிகைப்படுத்திய பிராதான்யம் கொடுக்கவேண்டும்?

ஹரிஜன முன்னேற்றம் பகவானுக் குகந்ததாகும். தமது சித்தத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான ஆண்களையும் பெண்களையும் அவர் தாமே அதில் சேரச் செய்வார். ஆதலால் நான் சித்தப்பிரமை கொண்டு உபவாசத்தி லிறங்கவில்லை யென்று நண்பர்கள் யாவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இச்சோதனையைப் பத்திரமாகக் கடந்து மீள இறைவன் எனக்கு வேண்டிய வலிமையைத் தருமாறு, அவர்கள் ஈசுவரனை வேண்டுமாறு அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். வைத்திய நண்பர்கள் என்ன பயந்தாலும் சரியே; எந்த சேவைக்காக வேனும் இன்னும் சில காலம் இம் மண்ணுலகில் நான் இருக்க வேண்டுவது அவசியமாயின், இறைவன் என்னை நிச்சயம் காப்பாற்றுவான்.

சீமையில் மாய நாடகம்

இந்தியா மந்திரியின் வெள்ளை அறிக்கையைப் பற்றி நாடெங்கும் ஒரே முகமாகக் கண்டித்துக் கொண்டிருக்கிறது. இதை யெல்லாம் இலட்சியம் செய்யாமல், கூட்டுக் கமிட்டியை நியமித்தார்கள். மற்ற ஏற்பாடுகளும் முறையே நடந்தன. எல்லாச் சடங்குகளையும் சேர்த்துப் பார்க்கும்பொழுது, வெள்ளை யறிக்கைக்குமேல் ஒரு அடிகூட முன்னே எடுத்து வைக்கப் பிரிட்டிஷ் சர்க்காருக்கு இஷ்டமில்லை யென்பதும், கூடுமானுல் அதையும் இன்னும் பிழிந்து துளிக்கூட சாரமில்லாத வெறும் சக்கையாகச் செய்யவே முயற்சிகள் நடக்கின்றன வென்பதும் நன்ருக விளங்குகின்றது.

என்ருலும், ஹோர் ஏதோ இந்தியாவுக்கு ஏதோ அள்ளிக் கொடுத்துவிடப் போவது போலவும், அவர் கை ரொம்ப தாராளமாக நீண்டுவிடா திருக்க முயற்சிப்பது போலவும் பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் மாய நாடகம் நடத்துவது மிதவாதிகள் கண்ணில் மண்ணைத் தூவுவதற்கே யாகும். கூட்டுக் கமிட்டித் தலைவர் லின்லித்கௌ என்பவர் பத்திரிகைகளுக்கு இந்தியா சம்பந்தமாக ஏதோ ஒரு வியாசம் எழுதி விட்டாராம். இதைப்பற்றி, காமன்ஸ் சபையிலும், லார்டு சபையிலும் பிரமாத ஆரவாரம் செய்திருக்கிருர்கள்.

இந்த ஆரவாரத்தால், மயங்கக் கூடியவர் இந்தியாவில், மிதவாதிகளைத் தவிர, வேறு யாரும் இருக்க மாட்டார்கள். இதெல்லாம், "நான் அடிக்கிருப் போல் அடிக்கிறேன், நீ அழுகிருப் போல் அழு" என்று சொல்லும் கதையைப் போலிருக்கிறதே தவிர, வேருென்றுமில்லை. கமிட்டி மெம்பர்கள் தங்கள் அபிப்பிராயங்களை இரகசியமாகச் சொன்னுலென்ன, பகிரங்கமாக எழுதினுலென்ன! எல்லாம் ஒன்று தான். இந்தச் சில்லறை விவகாரங்களிலெல்லாம், பிரமாதமாகக் கூக்குரல் போட்டு நாடகம் நடிக்கும் பேர் வழிகள், இந்தியா சம்பந்தமான சாரமான விஷயங்களில், வெகு ஒற்றுமையாக நடந்து கொள்ளுகிருர்கள். என்னே இவர்கள் ஜாலம்?

ஜயாப்ரூ தலை தூக்குது!

ஹோர் அறிக்கை வெளி வந்ததும், ஜயகர்-சாப்ரூ என்ற இரட்டையர்கள் "ஹா! ஹூ!" என்று போட்ட கூக்குரலைக் கேட்ட போது, "ஏது! இந்த ஆட்களுக்குப் புத்தி வந்து, இவர்கள் லண்டனுக்குக் கூடப் போக மாட்டார்கள் போலிருக்கிறதே" என்று தோன்றிற்று. ஆனுல், கூட்டுக் கமிட்டி அழைப்பு வந்ததும், எல்லாருக்கும் முந்தி இந்தப் பேர் வழிகள் கிளம்பி விட்டார்கள்.

இந்தியாவிலிருந்து இவர்கள் புறப்பட்டசோடு தெரியவில்லை. ஏதாவது ஒரு அறிக்கை யுண்டா? அறிக்கை வெளியிட்டாலும் யாரும் அதை இலட்சியம் செய்து படிக்கப் போவதில்லை என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரிந்தும் போதும். இப்படி மௌனமாகத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு இந்தியாவை விட்டுக் கடலிற் குதித்த இந்த இருதலைப் பிராணியான ஜயாப்ரூ, லண்டன் கரையைக் கண்டவுடனே, தனது இரட்டைத் தலையை மெள்ள வெளியே கிளப்புதய்யா!

ஜயாப்ரூ அறிக்கை எதை வேண்டுமானுலும் சொல்லிக் கொள்ளட்டும். அதைப்பற்றி நமக்கு அக்கரையில்லை. ஆனுல், "இந்தியாவின் மிக முன்னேற்றமான அரசியல் அபிப்பிராயங்களை உள்ளது உள்ளபடி எடுத்துச் சொல்லும் பிரதிநிதிகளாய் வந்திருக்கிறேம்" என்று அது சொல்லுவதுதான் விநோதம்.

வெள்ளைக் கடுதாசியை இந்தியா முழுவதும் கண்டிக்கிறதாம். ஆனுல், அதில் அடிப்படையாக மத்தியப் பொறுப்பும், சமஷ்டியும் விளங்குகின்றனவாம். மத்தியப் பொறுப்பு, கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியாய், கானல் நீராய் இருப்பதை இன்னும் உணராதிருப்பது இவர்கள் மூளையில் ஏற்பட்ட குழப்பமோ? மாரீச னென்ற மாய மான் போல, நெருங்க நெருங்க இன்னும் ஓடிக்கொண்டே யிருக்கும் சமஷ்டி அரசியல் திட்ட மென்ற மாயா ஜாலத்தை அறியாதிருப்பது தான் தீவிர ராஜிய ஞானமோ? அழகு! வெகு அழகு!!

உத்தரவு நீடிக்கப்பட்டது

பம்பாயில் போடப்பட்டிருந்த 144 வது பிரிவு உத்தரவு இன்னும் இரண்டுமாத காலத்துக்கு நீடித்திருப்பதாகச் சர்க்கார் கெஜட்டு கூறுகின்றது.

தொழிலாளி துயரம்

மனிதனது காயம் சதமானதல்ல. நோய்க்கும், முதுமைக்கும், மரணத்துக்கும் அது ஆட்பட்டே தீரவேண்டும். ஏழைத் தொழிலாளி உடலுரம் இருக்கும் வரையில் உழைக்கிறன். அவனும், அவன் குடும்பமும் ஏதோ கால் வயிற்றுக் கஞ்சியாவது குடிக்கின்றது. நோயோ முதுமையோ அவனைத் தொழிலுக்கு லாயக்கில்லாமல் செய்தாலும், சாவு அவனுக்கு ஏற்பட்டு விட்டாலும், விதவையும் குழந்தைகளும் பரிதபிக்கின்றனர். இவ்வாறு அவர்களைப் பரிதபிக்க விடுவது நீதி யல்லவென்று நாகரிக நாடுகள் "ஸோஷியல் இன்ஷியூரன்ஸ்" என்ற ஏற்பாட்டைச் செய்திருக்கின்றன. முதலாளிகள் இந்த இன்ஷியூரன்ஸுக்குப் பணம் கட்டுவது ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளில் நிர்ப்பந்தமாகும். சர்க்காரும் இதற்கு ஓரளவு பணம் கொடுப்பார்கள். வேலைக்கு லாயக்கில்லாமற் போகும் தொழிலாளி, விதவை, அநாதைக் குழந்தை ஆகியவருக்கு இந்த இன்ஷ்யூரன்ஸ் நிதியிலிருந்து உபகாரச் சம்பளம் கொடுத்து வருகிறார்கள்.

மற்ற நாடுகளை விட இந்தியாவிலுள்ள தொழிலாளிதான் பிஞ்சில் பழுத்து விடுகிறன். அவனுக்கு வேலை அதிகம். கூலி குறைவு. அரைப் பட்டினி கிடப்பவர் அநேகர். நோயோ தேகத்தில் சக்தி யில்லாத இந்தியத் தொழிலாளியை எளிதிலே பிடித்து விடுகிறது. ஆகையால் சர்க்கார் அறிக்கை யொன்று, வேறெந்த நாட்டையும் விட இந்தியாவுக்கே இந்த ஏற்பாடு அத்தியாவசியம் என்று கூறுகிறது.

என்றாலும் இந்தியாவிலே இந்த இன்ஷியூரன்ஸை நிர்ப்பந்தம் செய்யும் சட்டத்தை இயற்ற முடியாதென்று இந்திய சர்க்காரே சொல்லுகிறது. இந்த உபகாரம் பெற வேண்டியவர் எண்ணிக்கை ஏராளமா யிருக்கிறதாம். சர்க்கார் கையில் பணம் கிடையாதாம். ஆகையால், இது முடியாதாம். இதுதான் நொண்டிச் சாக்கு என்பது. ஆயிரம், பதினாயிரம், மாதமொன்றுக்குச் சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பவர் சம்பளத்தைக் குறைக்கட்டுமே! காலை முதல் மாலை வரை கால் கை சோர உழைத்து விட்டு, தேகத்தில் தென்பு போனதும் நிர்க்கதியாய்ப் பசித்துப் புலம்பும் ஏழைத் தொழிலாளிக்கு விமோசனமே யில்லையா?

க்ஷவரத்திற்கு ஆபத்தா?

கத்தி, துப்பாக்கி முதலிய அபாயம் விளைவிக்கக்கூடிய ஆயுதங்களை வைத்திருப்பவர்களுக்குத் தான் லைசென்ஸு உண்டு. அது ஒரு விதத்தில் ஞாயமென்றும் சொல்லலாம். வண்ணான் வெளுக்கும் கல்லுக்கும், க்ஷவரம் செய்யும் கத்திக்கும் லைசென்ஸு வேண்டு மென்பது அதியாச்சரியமா யிருக்கிறது. சர்க்காரின் உத்திரவை ஒட்டி தாராபுரம் முனிஸிபாலிட்டியார் நாவிதர்களும் லைசென்ஸு வாங்க வேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறார்களாம். ஏன் க்ஷவரக் கத்திக்கு இந்த பயம்? க்ஷவரக் கத்தியினால் ஆபத்து வந்துவிடு மென்ற பயமா? அல்லது அத்தொழிலை நசுக்க உத்தேசமா? இனி பேனாக்கத்திக்கும், குரும்பை வாங்கிக்கும் கூட லைசென்ஸு தேவையா யிருக்கும் போலிருக்கிறதே!

செய்தித் திரட்டு

"ராம ரஸம்"

பொய் யொழுக்கமும், போலித்தனமும், சூதும் இந்நாளில் மலிந்து கிடக்கின்றன. ஈசுவர நாமத்தினால் உயிர் வாழ முடியும் என்று யாரும் சொன்னதாகத் தெரியவில்லை. சமீபத்தில் மகாத்மாவை இந்தத் தள்ளாத வயதில் 21 நாள் பட்டினியிருந்து எப்படி உயிர் வாழ முடியும் என்று ஒருவர் கேட்டதற்கு 'ராம ரஸ'த்தைப் பருகிக் கொண்டிருப்பேன் என்று கூறியதைக் கேட்டால் எவர் உள்ளந்தான் கரையாது? இவரல்லவா லோக குரு!

பிரதிக்ஞை

காசியில் ஜாதி ஹிந்துக்களில் 6200 பேர்களும் இதரர்களில் 6600 பேர்களும் தீண்டாமையை ஒழிக்கப் பிரதிக்ஞை யெடுத்துக் கொண்டிருக்கிறார்களாம்.

சட்ட மறுப்பு

மதுரையினின்று புறப்பட்ட 6 வது கிராமப் பிரசாரத் தொண்டர் கோஷ்டி பல கிராமங்களில் பிரசாரம் செய்து கொண்டு போகையில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு மதுரைக்கு அனுப்பப்பட்டனர்.

பம்பாயில் காந்தி தினத்தை முன்னிட்டு நடந்த ஒரு கூட்டத்தில் "கச் மகாத்மா" என்று அழைக்கப்படும் 68 வது சர்வாதிகாரி ஸ்ரீமான் மோதிலால் ராவ்ஜிக்கு ஒரு வருஷம்.

பாய்ந்தது அச்சுச் சட்டம்!

நமது அச்சுக்கூடத்திற்கு 1000 ரூபா ஜாமீன்!
'சங்கி'ன் சகோதரி 'ஜன்ம பூமிக்கு' 1000ரூ. ஜாமீன்!

தமிழர்களே!

நமது 'சங்கு' காரியாலயத்துக்கு மீண்டும் ஒரு சோதனை வந்திருக்கிறது. நமது பத்திரிகை அச்சிடப்பட்டு வரும் 'லூனர்' அச்சுக் கூடத்தின் மீதும், 'சங்கி'ன் சகோதரியாகிய 'ஜன்ம பூமி' என்ற தெலுங்கு வெளியீட்டின் மீதும் அச்சுச் சட்டம் பாய்ந்திருக்கிறது. அச்சுக்கூடம் 1000 ரூபா ஜாமீனும், 'ஜன்ம பூமி' 1000 ரூபா ஜாமீனும் செலுத்த வேண்டுமென அதிகார வர்க்கத்தினர் கேட்டிருக்கின்றனர். என்ன சோதனை!

இன்றைக்கு தேசத்தின் நிலையோ மிக்க நெருக்கடி! பாரத நாட்டின் தலைவன் இன்று மகத்தான தியாக நெருப்பில் குதிக்கப் போகின்றான். 21 நாள் உண்ணு விரதமாம்! இந்த நெருப்பினின்று நமது தலைவன் உயிர் மீள வேண்டுமே யென்று நாமனைவரும் பரபரப்படைந்திருக்கிறோம். எரவாடாவில் நிகழும் அன்றாடச் செய்திகளை அறிய வேண்டி தேச மக்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். எரவாடாவில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் அவ்வப்போது தேச மக்களுக்கு தெரிவிக்கும் வழியத்தில் 'சங்கும்', 'ஜன்மபூமி'யும் தீவிரமாக இறங்கியுள. இந்த சமயத்திலா நமக்குச் சோதனை வர வேண்டும்?

நாட்டின் ராஜிய நிலையும் நெருக்கடியிலிருக்கின்றது. தேசத்தைக் காட்டிக் கொடுக்க ஒரு சுயாலக் கூட்டம் சீமை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தின் அநியாயங்களைப்பற்றி தயை தாக்ஷண்ய மின்றிப் பறை சாற்றும் பொறுப்பு வீரம் மிகுந்த தேசியப் பத்திரிகைகளின் கடமையாகும். இந்த வேலையிலும் நமது சங்கும் ஜன்மபூமியும் வீரத் தொண்டாற்றி வருகின்றன. இந்த சமயத்திலா எங்கள் அச்சுக்கூடத்திற்கு சோதனை வரவேண்டும்? இந்த நெருக்கடியான சமயத்தில் நமது பத்திரிகைகள் நடந்தே தீர வேண்டுமென பல அன்பர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். ஆனால் என் செய்வது?

அடுத்த பதினைந்தாம் தேதிக்குள் ஆயிர, ஆயிர ரூபா செலுத்தா விட்டால் நமது காரியாலயத்தை நாம் மூட வேண்டியது தான். 'தேசம்! தேசம்!' என்ற வெறியைத் தவிர சங்கு காரியாலயத்தாரிடம் வேறு பொருள் கிடையாது. என் செய்வதென்று அறியாது ஏழைகள் தவிக்கின்றோம்.

ஆனால் தமிழ் மக்களே! இந்தச் சோதனையில் எங்களுக்குப் பக்க பலமா யிருப்பது உங்களுடைய அன்பு தான். உங்களுடைய உதவி கொண்டு எந்தச் சோதனையையும் வெல்ல முடியு மென்று நாங்கள் நம்பியிருக்கிறோம். இந்த நேரத்தில் சங்கு காரியாலயத்தைக் காப்பாற்ற முனைந்துள்ள சில அன்பர்கள் 'சங்கு சகாய நிதி' என்று ஒரு நிதியை ஏற்படுத்தி யிருக்கின்றனர். அந்த நிதிக்கு சங்கின் தந்தையர் போன்ற தமிழ் மக்கள் அவரவர்களாலியன்ற அளவு உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதைத் தவிர வேறு நாம் என்ன செய்வது? பத்திரிகைகள் தொடர்ந்து நடக்கவேண்டிய பொறுப்பை தேச மக்களிடமும், அன்னை பராசக்தியிடமும் நாம் விட்டு விட்டோம். அன்பர்கள் உதவுக! வந்தே மாதரம்.

'சங்கு சகாய நிதி'

திரு. ராஜகோபாலய்யர்	10	0	0
திரு. சுப்பிரமணியன்	50	0	0
ஒரு அநுதாபி	5	0	0
ஜானகியம்மாள்	5	0	0
	70	0	0

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.